Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# சங்ககால மனைகளும் வடிவமைப்பும்

முனைவர் கி.துரை, உதவிப் பேராசிரியர்
அண்ணா பல்கலைக்கழக பொறியியல் கல்லூரி
விழுப்புரம்

76

**முன்னுரை**

மனை என்ற சொல்லிற்குக் குடியிருப்புடைய வீடு, குடும்பம், சிற்றில், நற்றாய், பசுத்தொழுவம், எனப் பலபொருள்கள் காணப்படுகின்றன. சங்க இலக்கியங்களில் மனையின் மாட்சி, மனை அமைவிடச் சிறப்புப் பற்றிப் பல்வேறு செய்திகள் உள்ளன. மனைகள் கட்டப்பட்டிருந்த முறை சுற்றுப்புறச் சூழல் போன்ற பல்வேறு வடிவங்களைச் சங்ககாலப் புலவர்கள் கூறிச் சென்றுள்ளனர். ஆகவே சங்ககாலத்தில் வாழ்ந்த மக்கள் தங்களுடைய இருப்பிடத்தை எவ்வாறு வடிவமைத்து வாழ்ந்தார்கள் என்பதைப் பற்றியும் மனைகளை எவ்வாறு வகுத்தார்கள் என்பதைப் பற்றியும் இக்கட்டுரை ஆராய்கிறது.

**மனை**

மனை என்பதற்கு வீடு என்னும் பொருள் மிகுதியாக அமைகின்றது. இதனை,

**மனைக்கொண்டு புக்கனன் நெடுந்தகை**[1]

**கூம்பியர் சிறகர் மனையுறை குரீஇ**[2]

**மனையுறைப் புறவின் செங்கோற்சேவல்**[3]

எனவரும் தொடர்கள் மனையின் பொருளை விளக்கிக் கூறுகிறது.

தொல்காப்பியர் மனை என்பதற்கு “வீடு” என்னும் பொருளை வழங்குகிறார். இதனை,

**“புணர்ந்துடன் போகிய கிழவோள் மனைஇருந்து”** [4]

**“மனையோர் கிளவி கேட்கும் வழியதுவே**

**மனையகம் புகாஅக் காலையான”** [5]

என்ற தொல்காப்பிய நூற்பா மனை என்பதற்கு வீடு என்ற பொருளைக் குறிப்பிடுவதை உணர்ந்து கொள்ள முடிகிறது.

**கன்னிமாடம்**

காவல் நிறைந்த கன்னிமாடங்கள் சங்க காலத்தில் கட்டப்பட்டிருந்தன. கன்னியருக்காகவே தனி மாடங்களை ஒதுக்கிப் பயன்படுத்தும் மரபு சங்ககாலத்திலேயே இருந்துள்ளது. தனிக்குடும்பம் அல்லது கூட்டுக்கூடும்பம் ஆகியவற்றிலுள்ள உறுப்பினர்களுக்கு உரிய இடவசதிகளைத் தனியே வீட்டினுள் கட்டியிருக்க வேண்டும். இவ்வகை வசதிகளை மாடங்களுடன் கூடிய கட்டடங்களில்தான் காணமுடிகின்றது. எனவே, பொருளாதாரத்தில் சிறந்தோரின் வீடுகள் பல்வேறு உட்பிரிவுகளையும் பெற்றிருந்தன என்பதை நம்மால் உணர்ந்து கொள்ளமுடிகின்றது. கன்னி மாடமாகிய மனை ஒன்றினை,

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

**“காப்புற வகுத்த கன்னியங் கடிமனை”** [6]

எனவரும் பெருங்கதை அடியினால் விளங்கிக்கொள்ளமுடிகிறது.

காப்புற வகுத்த கன்னிமாடம் என்பதால் முறைப்படி திட்டமிடப்பெற்ற கட்டடமாகவும் வடிவமைப்பு முறையில் பாதுகாப்புடன் கூடிய நெறி முறையில் கட்டப்பெற்றது என்பதால் திட்டமிடுதல் என்பது மிகச்சிறப்புடன் விளங்கியிருந்தமையை நம்மால் உணர்ந்துகொள்ள முடிகின்றது.

**செம்மண் பூச்சுடைய மண்**

மனைச் சுவர்கள் செம்மண்ணால் அழகுபடப் பூசியிருக்கும் காட்சியை அகநானூறு கூறுகின்றது. வெளியில் சென்றுவிட்ட தன் மகளும் அவளது தலைவனும் மனைக்கு வருகை தர உள்ளனர் என்ற செய்தி அறிந்த தாயானவள் மனையை அலங்காரம் செய்கின்றாள். செம்மண் கொண்டு புறச்சுவராகிய இஞ்சியை அழகுபடுத்தினாள் என்று அகநானூறு 196 ஆவது பாடல் எடுத்துரைக்கின்றது. இதன் மூலம் வெளிப்புறத்தே அமைகின்ற சுவருக்கு “இஞ்சி” என்று பெயரிட்டு அழைத்த செய்தியை உணர்ந்து கொள்ள முடிகின்றது. கோட்டையின் புறச்சுவருக்கும் இஞ்சி என்ற பெயருண்டு. இங்கு மனையைச் சுற்றி கட்டப்பட்டுள்ள புறச்சுவர்களுக்கு செம்மண்பூச்சு செய்தாள் எனப் பொருள் காணலாம்.

**மனைமரம்**

மனையாகிய வீட்டைச் சுற்றி மரங்களை வளர்த்திருந்தனர் என்ற செய்தியைச் சங்க கால இலக்கியங்கள் கூறுகின்றன. வீட்டில் வளர்க்கப்பெற்ற மரங்கள் “மனைமரங்கள்” என்றழைக்கப்பட்டன. முனையின் ஒரு பகுதியாகப் பூங்கா அமைக்கப்பட்டிருந்தது போன்ற செய்திகள் அக்கார மக்களின் வாழ்க்கைச் சூழலை வெளிக்காட்டுகின்றன. இவற்றை,

**மனைமரத்து எல்லுறு மௌவல் நாறும்**[7]

**மனை தாழ்வில் நொச்சி** [8]

**மனைப்பூங்காவின் மருங்கிற் கவினிய**[9]

என வரும் தொடர்களால் வீடுகளில் நொச்சி போன்ற உயர்ந்த மரங்கள் இருந்தன. மனையின் அயலில் மனை சார்ந்த தோட்டத்தில் பூங்கா போன்று அமைக்கப்பட்டிருந்தன். எனவே, சங்க கால மனைகள் மரம், செடி, கொடி, தோட்டம் போன்றவற்றால் அழகுபட அமைக்கப்பட்டிருந்தன என பொருள் கொள்ளலாம்.

**திண்ணை**

வீடுகளின் முன் பகுதி திண்ணை அமைப்புகளுடன் கட்டப்பட்டிருந்தன. திண்ணை வீட்டின் முகப்பில் இடம் பெறும் பகுதி என்பதால் இது முற்றத்தில் விரிவாக்கம் எனக் கருதமுடிகிறது. திறந்தவெளி முற்றங்களில் இருந்து திண்ணை சற்று மாறுபடுகின்றது. ஏனெனில் இப்பகுதி அமர்ந்தும் தூங்கியும் வாழ்வதற்குரிய வடிவமைப்புடையதான உள்ளது. திண்ணைகள் உயரமாகக் கட்டப்பட்டிருக்க வேண்டும். இதனை,

**“குறுந்தொடை நெடும்படிக்காற்**

**காடுந்திண்ணைப் பஃறகைப்பிற் புழைவாயிற்**

**போதிடை கழி”**

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

எனவரும் பட்டினப்பாலைத் தொடரால் அறியமுடிகிறது. திண்ணைப் பகுதி படிக்கட்டுகளைத் தாண்டிச் சென்றால் இருப்பது என்றும் படிகளின் நிறைவுப் பகுதியில் வீட்டின் தலைவாயில் கட்டப்பட்டிருந்தது என்ற செய்தியையும் இத்தொடர் அளிக்கின்றது. இவ்வகைத் திண்ணைகள் எவ்வாறு அமைக்கப்பட்டிருந்தன என்பதைக்

**“குங்குமமெழுதிச் சார்வுந் திண்ணையுங் குயிற்றி”**

எனும் சிந்தாமணித்தொடர் விளக்கம் அளிக்கின்றது. திண்ணை என்பது சாய்வாக அமர்வதற்கு ஏற்பக் கட்டப்படும் திண்டுப் பகுதியாகும். அத்திண்ணைகள் குங்கும நிறத்தில் வண்ணம் தீட்டப்பட்டிருந்தன என்ற செய்தியும் கூறப்படுகின்றது.

**சுருங்கை**

தமிழகத்தில் கி.பி. முதலாம் நூற்றாண்டில்“சுருங்கை” கட்டும் கட்டுமானத் தொழில்நுட்பம் இருந்துள்ளது. சுருங்கை என்பது தரையின் கீழ் அமைக்கப்படும் சாக்கடை என்பதாகும். இச்சொல்லிற்கு இணையான மற்றொரு சொல் “கரந்துபடை” என்பதாகும். சுருங்கை – கரந்துபடை என அடியார்க்குநல்லார் உரை எழுதுகின்றார்.

மதுரை நகரமைப்பில் சுருங்கை எவ்வாறு அமைக்கப்பட்டிருந்தது என்பதை,

**“நெடுமால் சுருங்கை நடுவழிப் போந்து**
**கடுமா களிறணத்துக் கைவிடு நீர்போலும்**
**நெடுநீர் மலிபுனல் நீண்மாடக் கூடல்**
**கடிமதில் பெய்யும் பொழுது”** [10]

எனப் பரிபாடல் கூறுகின்றது.

**அவைக்களம்**

மன்னரின் அவைக்களச் சிறப்புகளைச் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. இதன் வாயிலாக அரண்மனைகளில் அவைக்களம் அமைக்கப்பட்டிருந்தது என்பதை அறியமுடிகின்றது. ஆனால் எத்தகைய வடிவமைப்பில் கட்டப்படடிருந்தது போன்ற செய்திகள் இல்லை. ஆனால் கோசரின் அவைக்களத்தைப் புறநானூறு கூறுகின்றது. இதனால் சங்க காலத்தில் அவைக்களம் அமைக்கும் முறை இருந்துள்ளது தெளிவாகின்றது.

**புறவறை**

புறவறை என்பது வளைவுடைய படுக்கையறையாகும். இது திரையை வளைத்துக்கட்டிய அமைப்பைக் குறிக்கின்றது. இத்தகைய புறவறை பற்றிய செய்தியை முல்லைப்பாடல் கூறுகின்றது. யவனர் புலிச்சங்கிலி கட்டப்பட்ட நல்ல இல்லத்தில் திருமணிகளால் அலங்காரம் செய்யப்பெற்ற அறை மன்னனுக்குரியது என்று கூறுகின்றது. எனவே மன்னர்களின் படுக்கையறைகள் அலங்காரம் நிறைந்தும் தனித்தும் இருந்தன என்பது புலப்படுகின்றது.

**அம்பணம்**

கட்டடக்கலையின் ஒவ்வொரு அங்கத்தினைப் பற்றியும் குறிப்பிட்டுள்ள செய்திகளைச் சங்க இலக்கியங்கள் வெளிக்காட்டுகின்றன. கூரைப் பகுதியின் கீழ்ப்பகுதிகளில் நீர் வடிந்தோடும் வசதிக்காகத் “தூம்புகள்” அமைக்கப்படும். தூம்புகளைக் கொண்ட கூரைகள், முற்றங்கள் சங்க

காலத்தில் இருந்துள்ளன. அவை “அம்பணம்” என்றழைக்கப்பட்டன. இவை பல்வேறு வடிவமைப்பில் கோயில் கட்டடக்கலையிலும் பிறக் கட்டடக்கலையிலும் இடம்பெற்றுள்ளன என்பதை நெடுநல்வாடையின் தொடர்கள் விளக்குகின்றன.

**“நிலவுப்பயன் கொள்ளும் நெடுவெண் முற்றத்து**
**கிம்புரிப் பகுவாய் அம்பணம் நிறைய**
**கலிழ்ந்து வீழ்அருவிப் பாடுவிறத்து அயல”[11]**

எனவரும் தொர்களால் “சுறாமீன்” வடிவமுடைய அம்பணம் அமைக்கப்பட்டிருந்தது என்ற செய்தியை அறியமுடிகின்றது.

**இதனம்**

சங்ககாலக் கட்டடக்கலைச் சொற்களில் இடம்பெறும் “இதன்” “இதனம்” எனும் சொற்களுக்குப் “பரண்” என்று பொருள். பரண் அமைப்பு முறை அமைவிடம் பற்றிய பல்வேறு செய்திகளைச் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. பரண் வடிவமைப்பு குடிசையின் வடிவமைப்புடையதாகச் சுட்டப் பெறுகின்றது. இதில் பாதுகாப்புக்குரிய இடமாகிய பரண்கள், பாதுகாப்புச் செய்தலுக்குரிய இடம் என்றமைகின்றன. அமைவிடங்கள் எனும் நிலையில் குறிஞ்சி நிலப் பகுதிகளில் மலை மரங்கள் மீதும் பரண்கள் அமைக்கப்பட்டிருந்தன.

**சாளரங்கள்**

தமிழகக் கட்டடக்கலையில் வியப்பூட்டும் செய்திகளில் ஒன்று சாளரங்களாகும். சாளரங்கள் காற்றோட்ட வசதிக்காகவும் இயற்கை வெளிச்சத்திற்காகவும் கட்டப்படும் வடிவமைப்பாகும். கற்கால மக்கள் துளைகளை வைத்துள்ளனர் என்பதையும் அறிகிறோம். இதன் தொடர்ச்சியில் வரும் வளர்ச்சிக் கூறுகளே சாளரங்களாகும். சிறிய சிறிய கண்களெனப்படும் துவாரங்களைக் கொண்ட சாளரங்கள் குறுங்கண் சாளரங்கள் எனப் பெயர் பெற்றன.

**“வளை நுழையும் வாய் பொருந்தி”**
**“கோலச் சாளரக் குறுங்கண் நுழைந்து”**

எனவரும் இலக்கியச் சான்றுகளால் சாளரங்கள் அமைக்கும் முறை புலனாகிறது. சாளரங்கள் மணிகளால் அழகு செய்யப்பெற்றிருந்தன என்பதால் அவை கட்டடங்களின் அமைப்பிற்கேற்ப கட்டப்பட்டிருந்தன என்பதும் தெரியவருகின்றது. கொலச் சாளரக் குறுங்கண் என்பதால் கோலமிட்டார்போல் வடிவமைக்கப்பட்டும், குறுங்கண் என்பதால் சிறிய கண்களை அதாவது சிறிய துளைகயைக் கொண்ட சாளரங்கள் இருந்தன என்பது புலப்படுகிறது.

**முடிவுரை**

சங்ககால மக்கள் எவ்வாறு மனைகளை வடிவமைத்தார்கள் என்பது பற்றியும் கட்டடங்களை எவ்வாறு கட்டியுள்ளார்கள் என்பது பற்றியும் இயற்கையோடு எவ்வாறு ஒட்டி வாழ்க்கையை நடத்தினார்கள் என்பது பற்றியும் கன்னிமாடம், செம்மண் பூச்சுடைய மண், மனைமரம், திண்ணை,சாளரம்,சுருங்கை போன்ற கட்டமைப்புகளைப் பற்றியும் இக்கட்டுரையின் வாயிலாக தெளிவாக தெளிவாக விளங்கிக்கொள்ளமுடிகிறது.

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

**அடிக்குறிப்புகள்**

1.அகநானூறு 384. 13

2.குறுதொகை – 29

3.நெடுநல்வாடை - 46

4. தொல்காப்பியம். பொருள். 14

5. தொல்காப்பியம். பொருள். 131

6. பெருங்கதை 46

7. குறுந்தொகை 19

8. அகநானூறு 23

9. பெருங்கதை 7

10. பரிபாடல் 3

11. நெடுநல்வாடை

**துணைநூற்பட்டியல்**

1. தமிழகக் கலை வரலாறு சிற்பம், கோயில்
மயிலைசீனி. வேங்கடசாமி
தமிழருவி பதிப்பகம் நெ.4 பெருமாள் கோயில் தெரு
கொழுந்தலூர் , திருவள்ளூர் மாவட்டம் 603 203

2. தமிழக நாட்டுப்புறக் கட்டடக் கலை மரபு
டாக்டர் இராசு பவுன்துரை
மெய்யப்பன் பதிப்பகம்
53, புதுத்தெரு, சிதம்பரம் – 608001

3.தமிழகக் கோயில்கலை
முனைவர் இரா. சந்திரசேகரன்
ப.சரவணன், ஆர்.சரவணன் த.செந்தில்
நாம் தமிழர் பதிப்பகம்
தோப்பு வெங்கடாசலம் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை – 5

3. தமிழரின் தாயகம்
அறவாணன்.க.ப
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை

4. தமிழர் நாட்டுப்பாடல்கள்
சுப்பிரமணியன்.ச.வே
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.